Registered as a News Paper   பக்கங்கள் 04   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 08   திருவள்ளுவர் ஆண்டு 2023   மார்கழி 12   (27-12-1992)   ஞாயிற்றுக்கிழமை   ஓசை 813

## வருடமொன்றுக்கு 800 பேர் பாம்புக் கடியால் மரணம்

உலகில் பாம்புக் கடிகளால் மரணமடைவோர், இலங்கையிலேயே அதிக மாகும். வருடந்தோறும் 800க்கு மேற்பட்டோர் பாம்புக் கடியினால் மரணம் அடைகின்றனர். இவர்களில் 27 சத வீதத்தினர் 15 வயதுக்கு குறைந்தவர்களா வர். நாகம், விரியன் மற்றும் பொதுவான பாம்புகளினால் 95 சதவீத மானோர் மரணமடைகின்றனர். வருடமொன்றிற்கு ஒரு லட்சம் பேரிற்கு 6பேர் என்ற விகிதத்தில் மரணம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாம்புக்கடி மற்றும் அதனால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்திருப்பதால் சிகிச்சை அளிப் பதற்கான முறைகளை ஆராய மருத்துவர் சங்கம் குழுவொன்றை நியமித்துள்ளது.

# வடகிழக்கு யுத்தம் தொடரும்: தளபதி ஹமில்டன் அறிவிப்பு

## புலிகளை வெற்றிகொள்ளும் வரை ராணுவ அணுகுமுறையில் மாற்றமிராது

(கொழும்பு)

"விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ளும்வரை இராணுவம் புலிகளுக்கு எதிராக உறுதியாகப் போரிடும்" இவ்வாறு சிறிலங்கா கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத் தின் தலைமைத் தளபதியான ஜெனரல் ஹமில்டன்வனசிங்கா தெரிவித்துள்ளார்.


மேலும் அவர் தெரிவிக்கை யில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும்வரை புலிகளுக்கு எதிரான போர் தொடரும் எனவும் தெரிவித்தார்.

தற்பொழுது அமுல் செய் யப்படும் கட்டளைகளின்படி சிறிலங்கா பாதுகாப்பு படை யினர் யுத்தத்தை வெற்றிகர மாகவும் விரைவாக வும் முடிவுக்குக் கொண்டுவர உறுதிபூண்டுள்ளார்கள் என கூட்டுப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளைப் பலவீனமடையச் செய்வது வடக்கு - கிழக்கு பிரச்சினைக் குத் தீர்வு காண்பது என்ப வற்றை உறுதி செய்யும் நோக் கத்தோடு சகல மட்டங் களிலும் புலிகளுக்கு எதிராக போரை தொடர்ந்து நடத்த வேண்டியதன் அவசியத்தை கூட்டுப்படை தலைமையலு வலகம் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யுத்தநிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு சமாதான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்துள் ளமை தெரிந்ததே.

ஆனால் விடுதலைப் புலி களின் கை ஓங்கியுள்ள இன் றைய நிலையில் இராணுவம் யுத்தநிறுத்தம் செய்யவோ அன்றி பேச்சுவார்த்தை நடத் தவோ தயாராக இல்லை எனக் கொழும்பு அர சியல் வட்டாரங்களில் இரு ந்து தெரியவருகிறது.



நத்தார் பண்டிகையன்று அரியாலையில் சிறிலங்கா விமானப்படை மேற்கொண்ட குண்டு வீச்சினால் சேதமடைந்த ஒரு வீட்டின் தோற்றம்.

## புகையிரத நிலையத்தில் குண்டுவெடிப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் புதிய நகர புகையிரத நிலையத்தில் நின்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரில் ஒருவரிட மிருந்த கைக் குண்டு தவறுத லாக வெடித்தமையால் பதி னொரு பேர் காயமடைந்துள் ளனர் இவர்களில் அநேகமா னோர் புகையிரதத்திற்காக காத்து நின்ற பயணிகள் என் பது குறிப்பிடத்தக்கது

## யாழ். உணவு விநியோகம்

## 'குமாரி'க்கு பதிலாக வேறொரு கப்பல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டுக்கான அத்தியாவசியப் பொருள் களின் விநியோகத்துக்காக கப்பல் சேவையைதொடர்ந்து நடாத்துவதற்கு கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவு இலங்கம் தெரிவித்துள் ளது.

தற்பொழுது சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருக்கும் "குமாரி" என்ற கப்பலின் சேவை இடைநிறுத்தி வைக் கப்பட உள்ளது. "குமண" என்ற கப்பல் தொடர்ந்தும்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வெற்றி ஆண்டான 1992

## பலியான ஆயுதப் படையினர் 1421 பறித்தெடுத்த ஆயுதங்கள் 1323

(யாழ்ப்பாணம்)

"கடந்த போராண்டில் 1379இற்கும் அதிகமான சிங் களப் படையினர் கொல்லப் பட்டனர். 1284 ஆயுதங்களும் சுமார் ஏழு லட்சம ரவைகளும் பெருந்தொகையான எறி கணைகள் கைக்குண்டுகள் தக வற் தொடர்பு சாதனங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள் ளன.

இவ்வாறு விடுதலைப் புலி

குறிப்பிடத் தக்கது. இதே வேளை கடந்த 24ஆம் திகதி மணலாற்றில் இடம் பெற்ற தாக்குதலில் 42 படையினர் கொல்லப்பட்டதும் 39ஆயுதங் கள் மற்றும் வெடிப் பொருள் கள் கைப்பற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அதில் மேலும் கொல்லப் பட்ட படையினரின் எண் ணிக்கை ஜனவரியில்-101பேர், பெப்ரவரியில்-124, மார்ச்சில்-

டிசெம்பர் 22-ம் திகதி வரை -33 பேர் என குறிப்பிடப்பட் டுள்ளது:

மேலும் சிறிலங்கா படை யினரிடமிருந்து கைப்பற்றப் பட்ட 1284 ஆயுதங்களில் 50 கலிபர்கள் - 04, பல்வேறு வகைகளைச் சேர்ந்த இலகு இயந்திரத்துப்பாக்கிகள் (எல். எம். ஜி)- 92,ஜி.பி.எம்.ஜி -04 எம். கே. எம். எம். ஜி - 01, எல் 3 எம். எம். ஜி - 02 என்

# ராணுவ ஆயுதக் கைவிருப்பு கணக்கிடக் குழு நியமனம்

## தளபதிகள் மட்டத்தில் முரண்பாடு தீவிரம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடத்தின் கட்டுப்

வடக்கு-கிழக்கு யுத்தத்

இந்த விசேட குழுவில்

சிறிலங்கா பாதுகாப்பு படை பலவீனமடையச் செய்வது கூட்டுப்படை தலைமையிலு

## புலிகளின் வெற்றி ஆண்டான 1992

# பலியான ஆயுதப் படையினர் 1421
# பறித்தெடுத்த ஆயுதங்கள் 1323

(யாழ்ப்பாணம்)

''கடந்த போராண்டில் 1379இற்கும் அதிகமான சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர். 1284 ஆயுதங்களும் சுமார் ஏழு லட்சம் ரவைகளும் பெருந்தொகையான எறிகணைகள் கைக்குண்டுகள் தகவல் தொடர்பு சாதனங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் எண்ணிக்கை டிசெம்பர் 22ஆம் திகதி வரை என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை கடந்த 24ஆம் திகதி மணலாற்றில் இடம் பெற்ற தாக்குதலில் 42 படையினர் கொல்லப்பட்டதும் 39 ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருள்கள் கைப்பற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அதில் மேலும் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை ஜனவரியில்-101 பேர், பெப்ரவரியில்-124, மார்ச்சில்-127 பேர், ஏப்பிரலில்-83பேர், மேயில் - 185 பேர், யூனில்-143 பேர். யூலையில்-186பேர், ஓகஸ்டில்-75, செப்டம்பரில்-136 பேர், ஒக்டோபரில் 77 பேர், நவம்பரில் 109பேர், டிசெம்பர் 22-ம் திகதி வரை -33 பேர் என குறிப்பிடப்பட்டுள்ளது:

மேலும் சிறிலங்கா படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 1284 ஆயுதங்களில் 50 கலிபர்கள் - 04, பல்வேறு வகைகளைச் சேர்ந்த இலகு இயந்திரத்துப்பாக்கிகள் (எல். எம். ஜி)- 92, ஜி.பி.எம்.ஜி -04 எம். கே. எம். எம். ஜி - 01, எல் 3 எம். எம். ஜி - 02 என்பனவும்,

துப்பாக்கிகளில் ஏ கே வகைகள்- 524, ரி 56-2- 265, ஜி 3 ஏ.3 - 46, எஸ். எல். ஆர் - 38 எவ். என் சி - 187,

(4-ம் பக்கம் பார்க்க)

...ளமை தெரிந்ததே.

ஆனால் விடுதலைப் புலிகளின் கை ஓங்கியுள்ள இன்றைய நிலையில் இராணுவம் யுத்தநிறுத்தம் செய்யவோ அன்றி பேச்சுவார்த்தை நடாத்தவோ தயாராக இல்லை எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

புகையிரத நிலையத்தில் நின்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரில் ஒருவரிடமிருந்த எகே ஐண்டு தவறுதலாக வெடித்தமையால் பதினொரு பேர் காயமடைந்துள்ளனர் இவர்களில் அநேகமானோர் புகையிரதத்திற்காக காத்து நின்ற பயணிகள் என்பது குறிப்பிடத்தக்கது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டுக்கான அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்துக்காக கப்பல் சேவையைதொடர்ந்து நடாத்துவதற்கு கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவு இணக்கம் தெரிவித்துள்ளது.

தற்பொழுது சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருக்கும் ''குமாரி'' என்ற கப்பலின் சேவை இடைநிறுத்தி வைக்கப்பட உள்ளது. ''குமண'' என்ற கப்பல் தொடர்ந்தும்

(4-ம் பக்கம் பார்க்க)

# ராணுவ ஆயுதக் கையிருப்பு கணக்கிடக் குழு நியமனம்

## தளபதிகள் மட்டத்தில் முரண்பாடு தீவிரம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஆயுதங்களின் தொகையைக் கணக்கிடுவதற்கென கூட்டுப்படைத்தலைமை அலுவலகம் விசேட குழு ஒன்றை நியமித்துள்ள விவகாரம் ராணுவ வட்டாரங்களில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன

இராணுவ முகாம்கள், பண்டசாலைகளிலுள்ள ஆயுதங்கள் இராணுவ உபகரணங்களை கணக்கிடுவதற்கென ஹமில்டன் வனசிங்காவினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது இக்குழு இராணுவத் தலைமைப்பீடத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஆயுதக் கிடங்குகளில் கணக்கீடு செய்து முடித்துவிட்டது என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இக்குழு இராணுவ முகாம்கள் பண்டசாலைகளில் கணக்கிடு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு தேவையான யுத்த தளபாடங்களை வாங்குவதற்காகவே இக் கணக்கீடு செய்யப்படுவதாக கூட்டுப்படைத் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது ஆனால் இதனை ஏற்றுக்கொள்ள இராணுவ தலைமைப்பீடம் தயாராக இல்லை எனத் தெரியவருகிறது.

இந்த விசேட குழுவில் யுத்தநிலைபற்றியும், யுத்தம் பற்றியும் தெரியாதவர்கள் உள்ளடங்கி இருப்பதால் இராணுவத்தினரிடமுள்ள யுத்த தளபாடங்களின் இருப்பு வெளியாருக்கு தெரியவரக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு எனவும், இவ்வாறான

(4-ம் பக்கம் பார்க்க)

# வாழைச்சேனையில் கண்ணிவெடி
# ஜீப் சிதறி ஆறு பேர் மரணம்

(கொழும்பு)

வாழைச்சேனையில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் ஓர் அரச அதிகாரி உட்பட ஆறுபேர் மரணமடைந்ததாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் மரணமானவர் ஒரு முஸ்லிம் அதிகாரி எனவும் இதனால் வாழைச்சேனைப் பகுதியில் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் பயணம்செய்த ஜீப் வண்டி கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியதினாலேயே இவர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இப் பகுதியில் முஸ்லிம்—தமிழ் மக்களுக்கிடையில் பதற்றநிலை ஏற்பட்டதினால் பெருமளவு இராணுவத்தினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

# மாவட்ட செயலகங்களின் முக்கியத்துவம் குறையாது

(கொழும்பு)

நிர்வாக ரீதியான அதிகாரப் பங்கீட்டின்கீழ், முழுமையான பிரதேச செயலகங்கள் நிறுவப்பட்ட பின்னரும் மாவட்ட மட்ட நிர்வாகத்தின் முதன்மை அவசியமாக இருக்குமென கொள்கைத் திட்டமிடல் செயற்படுத்தல் அமைச்சின் பொது முதலீடு 1992—1996 என்ற ஆவணத்தில் தெளிவு படுத்தப் பட்டுள்ளது.

தேர்தல் தொகுதிகள் மாவட்ட அடிப்படையில் அமைந்துள்ளன. வரவு செல

(4-ம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு படையினருக்கு விசேட ஒலிபரப்பு சேவை

(கொழும்பு)

ஜனவரி முதலாம் திகதி முதல் பாதுகாப்பு படையினருக்கென தனியான ஒலிபரப்பு சேவையை ஆரம்பிக்க ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டிருப்பதாகவும், இராணுவ ஒலிபரப்பு சேவை என அழைக்கப்படும் இச் சேவை யாழ்ப்பாணத்திலிருந்து நடாத்தப்பட இருப்பதாகவும், தமிழ் சிங்கள நிகழ்ச்சிகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை ஆறு மணி முதல் இரவு பத்து மணி வரையும் இச் சேவையில் படையினருக்கு மன உற்சாகம் ஊட்டும் நிகழ்ச்சிகளும், திரைப்படப் பாடல்களும், உள்ளூர், வெளியூர் செய்திகளும் இடம்பெற இருக்கின்றன. மேலும் இது போன்ற சேவைகள் மட்டக்களப்பு, வவுனியா நகரங்களிலும் விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும், நகர எவ். எம். அலைவரிசை சேவை நடத்தப்படும் எனவும் இதற்கென பதினாறு எவ். எம். ட்ரான்ஸ் மீட்டர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும் கூட்டுத்தாபன தலைவர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

# இன்று மீட்பு நிதி சேகரிப்பு நேர அட்டவணை

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு. | இடம் | நேரம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம்<br>காரைநகர்<br>வேலணை<br>நல்லூர்<br>கோப்பாய் | மங்கையற்கரசி மகா-வித்தியாலயம், நல்லூர். | காலை 8.30-10.30 |
| உடுவில்<br>சண்டிலிப்பாய்<br>சங்கானை<br>தெல்லிப்பழை<br>காரைநகர் | மெமோறியல் கல்லூரி மானிப்பாய். | காலை 11.00-12.00 |
| சாவகச்சேரி<br>பச்சிலைப்பள்ளி | சாவகச்சேரி இந்துக்-கல்லூரி, சங்கத்தானை. | மாலை 2.00-3.00 |
| கரவெட்டி<br>பருத்தித்துறை<br>வடமராட்சி கிழக்கு | நெல்லியடி மத்திய-மகாவித்தியாலயம். | மாலை 4.00-5.00 |

# இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஏற்படும்

## - அவுஸ்திரேலிய தூதுவரின் ஆரூடம்

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று நம்புவதாக கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் கூறியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில், நீண்ட காலமாகத் தீர்வு காணப்படாமல் இருக்கும், இனப்பிரச்சினைக்கும் மோதல்களுக்கும் கூடிய விரைவில் தீர்வு காணப்பட்டு பேச்சுவார்த்தை மூலமாக சமாதான சூழ்நிலை விரைவில் உருவாக்கப்படும் என்றும், அதன் மூலம் முன்னர் போல் சகல இன மக்களும் சௌஜன்யத்துடன் வாழக்கூடிய சுமுக நிலை தோன்றும் எனவும் நம்புவதாகத் தெரிவித்தார்.

# அராலிக்கடலில் மீனவர்மீது ஷெல் வீச்சு

(மானிப்பாய்)

அராலிக் கடலில் சிறிலங்கா இராணுவத்தின் எல்லை மீறிய அடாவடித்தனமான நடவடிக்கைகளால் சில தினங்களாக அப்பகுதி மீனவர்களின் தொழில்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு தொழிலுக்கு சென்ற 14-க்கும் மேற்பட்ட மீன்பிடிப் படகுகளை நோக்கி அராலித்துறையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் 'ஷெல்' தாக்குதல்களை மேற்கொண்டனர். மேலும் பரா வெளிச்சம் பாய்ச்சப்பட்டு இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்துக் கொண்டனர், இதனால்

(4-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை அகதி முகாமில்

# பச்சிளம் குழந்தைகள் பாலுணவின்றி அவதி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாமில் நூற்றுக்கணக்கான பச்சிளம் குழந்தைகள் பாலுணவுகள் எதுவுமின்றி ஆறு மாதங்களுக்கு மேலாக அவலநிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் உள்ள காரைதீவு அகதிகள் முகாமில் மூன்று வயதுக்குட்பட்ட சுமார் 450 இற்கும் அதிகமான குழந்தைகளுக்கு கடந்த ஆறு மாதங்களாக தேவையான அளவு பாலுணவு மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் எதுவும் கிடைக்கவில்லை.

இம்மாவட்டத்தில் உள்ள வளத்தாப்பிட்டி, மல்வத்தை, வீரமுனை, சம்மாந்துறை, திராய்க்கேணி, அட்டப்பள்ளம், நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, கல்முனை, உதயபுரம், காரைதீவு எல்லை ஆகியவை உட்பட சுமார் 13 தமிழ்க்கிராமங்களில் வாழ்ந்து வந்த மக்கள் கடந்த 1990-ம் ஆண்டு ஆரம்பமாகிய சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து அங்கிருந்து உடுத்த உடையுடன் இடம்பெயர்ந்து காரைதீவில் அகதிகளாக தஞ்சமடைந்தனர்.

இந்த அகதி மக்களுக்கு மேற்படி மாவட்டத்தில் இயங்கிவரும் பொது அமைப்புக்களோ அல்லது அரச சார்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (இ-5588)

### கலண்டர் விற்பனைக்கு

அழகிய முறையில் கலண்டர்கள் பதிப்பித்துப் பெற்றுக் கொள்ள ஸ்ரீலங்கா அச்சகம் (அச்சக வீதி). மலிவு விலையில் கலண்டர்கள் கொள்வனவு செய்வதற்கு ஸ்ரீகாந்தா புத்தகசாலை 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (3800)

### திருக்கணித மாதக் கலண்டர்

தினசரி விடுமுறை தினங்கள், விரதங்கள் விசேட நாட்கள் என்பவற்றினை அறிய திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டரை வாங்குங்கள், விலை ரூபா. 50-00 மட்டுமே. திருக்கணிதம், சாவகச்சேரி. (3369)

## சேவைக்கால கருத்தரங்கு

(வடமராட்சி)

வடமராட்சிக் கல்விக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 6 தொடக்கம் 11வரை தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கருத்தரங்கு இன்றும் நாளையும் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது இக் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வடமராட்சிக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ். செல்லத்துரை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

★ ★

யாழ். கல்விக்கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 1இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்

# படையினருக்கான உணவு விநியோகத்தில் மோசடி

(கொழும்பு)

உணவு, சிகரெட் மற்றும் பொருள்களை யுத்த முனைகளுக்கு அனுப்பும்போது அப்பொருள்கள் பெருமளவு கையாடப்படுவதால் இது குறித்து கவனமாக கண்காணிக்கும்படி பாதுகாப்பு அமைச்சு முப்படைகளையும் பணித்துள்ளது.

இராணுவ விநியோகப் பதிவேடுகளில் பொருள்கள் வழங்கப்பட்டதாகக் குறிக்கப்பட்டிருந்தும், அப்பொருள்கள் தம் கைக்கு வந்து சேரவில்லை என்று யுத்த முனையில் கடமையாற்றும் இராணுவத்தினர் முறைப்பாடு செய்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள சிலரின் உதவியுடன் இப்பொருள்கள் திருடப்பட்டு வெளிச்சந்தையில் விற்கப்படுவதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கை தேர்ந்த சில குழுக்கள் இந்தத் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்புப் படை வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த மோசடியில் சம்பந்தப்பட்டுள்ள சில இராணுவ உத்தியோகஸ்தர்கள் இது தொடர்பாக விசாரிக்கப்படுவதாக அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு - கிழக்கு யுத்த முனைக்கு என்று அனுப்பப்பட்ட பெருந்தொகையான சிகரெட் விநியோகத்துக்குப் பொறுப்பான சிலரின் உதவியுடன் கையாடப்பட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளில்விற்பனையாவதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

பொருள்களைத் திருடுவதில் பாதுகாப்புப் படையினருடன் தொடர்பு கொண்டிருந்த பல சிறு வியாபாரிகளைத் தாம் கைது செய்துள்ளதாகப் பொலிஸ் தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இலவச பாலர் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

1988-ம் ஆண்டு மாசி மாதம் 1-ம் திகதிக்கும் 1990-ம் ஆண்டு தை மாதம் 31 ஆம் திகதிக்கும் இடையில் பிறந்த பிள்ளைகள் யாழ் கின்னர் ஒழுங்கையில் இயங்கும் புங்குடுதீவு மேற்கு அமெரிக்கமிசன் வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இலவச பாலர் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என மேற்படி பாடசாலை அபிவிருத்திச்சபை அறிவித்துள்ளது. (22)

## வடமராட்சியில் மாவீரர் நினைவுகூரும் விழா

[வடமராட்சி]

வடமராட்சி வடக்கு கடற் புலிகள் பிரதேசத்தில் தாயக மீட்புக்காக இதுவரை கார்த்திகை, மார்கழி மாதங்களில் வீரச்சாவடைந்த 24 மாவீரர்களை நினைவுகூரும் விழா கடந்த வியாழன் இரவு 7. 30 மணியளவில் இன்பருட்டி காண்டீபன் விளையாட்டு மைதானத்தில் வடமராட்சி வடக்கு கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. வரதன் தலைமையில் நடைபெற்றது.

கப்டன் பாசமலர், வீரவேங்கை சிவா, லெப் காஞ்சனா, கப்டன் றோகன், 2-ம் லெப். பாலன், வீரவேங்கை சிவன், கப்டன் மோகன்ராம், 2-ம் லெப். பொன்னி, வீரவேங்கை இசைக்கோன், 2-ம் லெப் சிவனேஸ், 2-ம் லெப் காயத்திரி, வீரவேங்கை பட்டேல், வீரவேங்கை கண்ணன், 2-ம் லெப். பில்லர், லெப். அசோக், 2-ம் லெப். அசோகா, லெப். ரவி, கப்டன் நிமலன், கப்டன் அன்பு, கப்டன் இராஜாராம், கப்டன் சுந்தரி, ரவி, வீரவேங்கை மிரேஸ், வீரவேங்கை முகமட் ஆகிய மாவீரர்களுக்கான ஈகைச்சுடரை கடற்புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. தம்பி ஏற்றிவைத்தார். பெற்றோர் திருஉருவப்படங்களுக்கு மாலை அணிவித்து ஈகைச் சுடரை ஏற்றிவைத்தனர். தொடர்ந்து விடுதலைப் புலிகள் பிரமுகர்களால் நினைவுப் பேருரை நிகழ்த்தப்பட்டன. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன [யோ]

## வெளிநாடு செல்வோருக்கு உதவ வங்கி திட்டம்

[கொழும்பு]

வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு உதவும்முகமாக வங்கி உத்தரவாதத்திட்டம் ஒன்று அமுல் செய்யப்படுகிறது.

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. கூட்டுத்தாபனம் அதன் முதல் உத்தரவாதத்தை இந்த ஆண்டு ஜூன் முதலாம் திகதி இலங்கை வங்கிக்கு வழங்கியது. மக்கள் வங்கிக்கும் இந்த உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கு விமானப் பிரயாணச் சீட்டுக்களை வாங்குவதற்கு இத்திட்டம் உதவிசெய்கிறது.

ஏனைய வங்கிகளும் அடுத்த ஆண்டில் இத்திட்டத்தில் சேர்ந்துகொள்ளும்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் இரு தினங்களுக்கு ஆய்வுகூட பரிசோதனை

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான ஆய்வுகூடப் பரிசோதனைகள் வாரத்தில் இரு நாட்கள் நடைபெற்று வருகின்றன. இவ் வைத்தியசாலையின் ஆய்வுகூடப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு இதுவரை சனி கிழமைகளில் மாத்திரம் பருத்தித்துறை அரசினர்வைத்தியசாலையிலிருந்து ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் ஒருவர் சென்று வந்தார். தற்போது புதன்கிழமைகளிலும் இத்தொழில் நுட்பவியலாளர் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் ஆய்வு கூடப்பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றார். இதற்கான பணிப்புரைகளை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் அத்தியட்சகர் வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி விடுத்துள்ளார் (25)

### கலந்துரையாடல்

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை பத்து மணியளவில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளுமாறு சகல கிராம சேவையாளர்களுக்கும் அழைப்பு விடப்பட்டு உள்ளது.

### வருடாந்த பொதுக்கூட்டம்

அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று மாலை மூன்று மணியளவில் நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

## கமநல நிலையத்தில் பொருள்கள் கொள்ளை

[பருத்தித்துறை]

பருத்தித்துறையிலுள்ள கமநலச்சேவை நிலையம் இரவு வேளை கூரை பிரிக்கப்பட்டு ரொக்கட்பணம், கிருமிநாசினிகள், விதைகள், விவசாய உபகரணங்கள் உட்பட சுமார் 16,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. இக்கமநலச் சேவை நிலையக் கொள்ளை தொடர்பாக தமிழீழ காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [25]

## கிளிநொச்சி மாவட்டம்; 56 மாணவர்கள் சித்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் வெளியான 1992-ம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 56மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். இம் மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி 111 ஆகக் காணப்படுகின்றது. கடந்த வருடமும் திருவையாறு அ. த. க. பாடசாலையிலேயேகூடுதலானமாணவர்கள் சித்தியெய்தியது குறிப்பிடத்தக்கதுஒன்றாகும்.] [16

### விண்ணப்பங்கள்

SLOW & STEADY WINS THE RACE

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடாத்திய கழக வளர்ச்சிக்கான

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

## நினைவு கூருகின்றோம்

### 1992-12-27

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் தெல்லிப்பழையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய -

ராம் (மகாலிங்கம் அகிலன் - வீமன்காமம் - யாழ்.)

கோப்பாய்ப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய -

மதன் (கந்தசாமி சிவானந்தன் - கப்புது, கரவெட்டி - யாழ்.)

மட்டக்களப்பில் இந்தியப்படையினர், மற்றும் காவற்றுறையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது கொல்லப்பட்ட 30 தமிழர்கள்- ஏறாவூர் முகாமிலிருந்து இந்தியப் படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட எறிகணை செங்கலடி மருத்துவமனை மீது வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட சிறுவன், மூதாட்டி, மருத்துவமனை ஊழியர்.

1988 ஆம் ஆண்டு பூநொச்சிமுனைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

2-ம லெப். அர்ஜுன் (சின்னத்தம்பி தயாளன் - வன்னியர் ஒழுங்கை, ஆரையம்பதி - மட்டு ,

ராஜன் (தங்கராசா-பஞ்சத்தொடுவாய்-மட்டக்களப்பு )

லெப். அஜித் (சுப்பிரமணியம் தேவராஜா - ஆரையம்பதி - மட்டு.)

உருத்தி / உருத்திரன் [சினித்தம்பி விநாயகமூர்த்தி - நாவற்குடா - மட்டக்களப்பு.]

மட்டு - ஆரையம்பதியில் தேசவிரோதிகளின் முற்றுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

முரளி [பீதாம்பரம் நந்தகுமார் - ஆரையம்பதி, மட்டு.]

புதூர்ப்பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

வடமராட்சிக் கல்விக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 6 தொடக்கம் 11வரை தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கருத்தரங்கு இன்றும் நாளையும் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது இக் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வடமராட்சிக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ். செல்லத்துரை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

★ ★

யாழ். கல்விக்கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 1இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பான ஆரம்பக்கல்வி சேவைக் காலக் கருத்தரங்கு இம்மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## விரிவுரைகள்

பட்டப்பின் கல்வித் தகைமைச்சான்றிதழ் கற்கை நெறிக்கான விரிவுரைகள் முழுநேர ஆசிரிய மாணவர்களுக்கு 1993 . 01 04 ஆம் திகதியும், பகுதிநேர ஆசிரிய மாணவர்களுக்கு 1993 01.09 ஆம் திகதியும ஆரம்பமாகும்.

## 'ஒளி விழா'

ஏழாம் நாள் அடவென்டிஸ் ஆலயத்தில் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 4. 30 மணிக்கு நத்தார் புதுவருட நிகழ்ச்சிகள் "ஒளி விழா" நடைபெறும் என்று ஆலயத்தின் நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர்.

## பரிசளிப்பும் கௌரவிப்பும்

யா/ இருபாலை சீ. சீ. த, க. பாடசாலையில் இன்று காலை 9 மணியளவில் பரிசளிப்பு விழாவும், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சியும் இடம் பெற இருக்கிறது.

இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக மருதனார் மடம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கொத்தணி அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமியும் கௌரவ விருந்தினராக கோப்பாய் வைத்தியக் கலாநிதி திரு. திருமதி வை. தியகராசா ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலுள்ள கமநலச்சேவை நிலையம் இரவு வேளை கூரை பிரிக்கப்பட்டு ரொக்கப்பணம், கிருமிநாசினிகள், விதைகள், விவசாய உபகரணங்கள் உட்பட சுமார் 16,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. இக்கமநலச்சேவை நிலையக் கொள்ளை தொடர்பாக தமிழீழ காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [25]

# கிளிநொச்சி மாவட்டம்; 56 மாணவர்கள் சித்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் வெளியான 1992-ம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 56மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். இம் மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி 111 ஆகக் காணப்படுகின்றது.

கிளிநொச்சி புனித திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் கே. அனோஜன் என்ற மாணவன் 170 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொள்கிறார். இப்பாடசாலையில் இருந்து ஆறு மாணவர்களும் கிளி/திருவையாறு அ. த. கலவன் பாடசாலையில் இருந்து 15 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். கடந்த வருடமும் திருவையாறு அ. த. க. பாடசாலையிலேயே கூடுதலானமாணவர்கள் சித்தியெய்தியது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.] [16

## அதிபர் கூட்டம்

நாளை காலை யாழ்/ இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த யாழ். கல்விக் கோட்ட அதிபர்கள் கூட்டம் அன்று பிற்பகல் 2 00 மணிக்கு நடைபெறும் என கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

மூளாய் தெற்கு வாணி நிகேதன் சனசமூக நிலைய பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் நிலைய மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அங்கத்தினர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கல்வி டிப்ளோமா பரீட்சை

தேசிய கல்வி நிறுவனத்தால் யாழ் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியின் முதலாம் ஆண்டுப் பரீட்சை 1993 ஆம் ஆண்டு வைகாசி மாதம் முற்பகுதியில் நடைபெறுமென யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையினால் 1993-ம் ஆண்டிற்கான கூட்டுறவுபணியாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கணிதம் அல்லது கணக்கியல், தமிழ்மொழி உட்படஆறுபாடங்களில்சித்தி எய்தியவர்களிடமிருந்தும் ஏற்கனவே கூட்டுறவு சேவையில் உள்ளவர்களிடமிருந்தும்கோரப்பட்டுள்ளன.

பயிற்சிநெறி தொடர்ச்சியாக ஆறுமாதங்கள் நடைபெறும். விண்ணப்பமுடிவுதிகதி 30-12 92ஆகும் மேலதிகவிபரங்களுக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் கல்விஉத்தியோகஸ்தருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (16)

## பரிசளிப்பு விழா

புதிய கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல ஒருமணியளவில் நீராவியடி நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் துரைசிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மாணிக்கம் தம்பதிகளும், சிவராமன் தம்பதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## பிரிவுபசார விழா

நல்லூர் பரி. யாக்கோபு ஆலய ஜெயமண்டபத்தில் இன்று காலை ஒன்பது முப்பது மணியளவில் அருட்திரு. ஐசக் செல்வரத்தினம் அவர்களின் பிரிவுபசார விழா நடைபெறவுள்ளது. திரு. எஸ் ஜி. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பலரும் பாராட்டுரைகள் வழங்கவுள்ளனர்.


SLOW & STEADY WINS THE RACE

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடாத்திய கழக வளர்ச்சிக்கான

**அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

1-ம் பரிசு இல. 7589
2-ம் பரிசு இல. 557
3-ம் பரிசு 1744
4-ம் பரிசு 4597
5-ம் பரிசு 3102

**ஆறுதல் பரிசுகள்**

| | | |
|---|---|---|
| 1. 5007 | 4. 866 | 7. 2161 |
| 2. 4319 | 5. 8035 | 8. 3167 |
| 3. 1596 | 6. 7090 | 9. 5508 |
| 10. 3703 | | |

அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பிற்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இ. இராசநாதன்
தலைவர்

ஆ. புவனேந்திரம்
செயலாளர்

ஐக்கிய விளையாட்டுக் கழகம்
பருத்தித்துறை.

(சி-5660)



❋ அந்தியேட்டிக்குத் தேவையான 12" X 10" Recopy புகைப்படங்கள்
❋ நினைவஞ்சலி, கல்வெட்டு, புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line Tone, Colour Blocks
❋ Photo Polymer (பிளாஸ்ரிக் Blocks)
❋ றபர் சீல்
❋ ஓவிய வேலைகள்
❋ விளம்பர ஸ்ரிக்கேஸ்

தரமாக குறைந்த விலையில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ள

**கொழும்பு ஸ்ருடியோ**
யாழ்ப்பாணம்.

(சி-5518)



திதில் கொல்லப்பட்ட சிறுவன், மூதாட்டி, மருத்துவ மனை ஊழியர்.

1988 ஆம் ஆண்டு பூநொச்சிமுனைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

2-ம லெப். அர்ஜுன் (சின்னத்தம்பி தயாளன் - வன்னியர் ஒழுங்கை, ஆரையம்பதி - மட்டு,
ராஜன் (தங்கராசா-பஞ்சத்தொடுவாய்-மட்டக்களப்பு)

லெப். அஜித் (சுப்பிரமணியம் தேவராஜா - ஆரையம்பதி - மட்டு.)
உருத்தி / உருத்திரன் [சினித்தம்பி விநாயகமூர்த்தி - நாவற்குடா - மட்டக்களப்பு.]

மட்டு - ஆரையம்பதியில் தேசவிரோதிகளின் முற்றுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
முரளி [பீதாம்பரம் நந்தகுமார் - ஆரையம்பதி, மட்டு.]

புதூர்ப்பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
நிக்கலஸ் [ஸ்ரீ முருகன் - கூழாவடி, கொலனி.]

மியாங்குளம்பகுதியில் இந்தியப் படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய -
தீபன் [கிருஷ்ணபிள்ளை சதாசிவம் - ஐயங்கேணி, ஏறாவூர்.]
தயான் [சின்னத்தம்பி சக்திவடிவேல - ஆரையம்பதி மட்டக்களப்பு ]
ஜீவன் [சண்முகநாதன் சதாசிவம் - ஏறாவூர், மட்டு.]

1989ஆம் ஆண்டு வவுனியா நெளுக்குளத்தில் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-
பிரேஸ் (இராசலிங்கம் சதிஸ்குமரன்- சதிஸ்குமரன் வீதி, தெனியம்பை வல்வெட்டித்துறை-யாழ்.)

1990ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய-
மாறன் (சவரிமுத்து அமலதாஸ்- இல; 109, சேவையர் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)
செம்பவளம் (செல்லத்துரை யாழின்பராசா- தென்னியங்குளம், துணுக்காய்)
லெப். குமரன் (2-ம் வட்டாரம், குமரன்வீதி புங்குடுதீவு- யாழ்.)

வடமராட்சிப்பகுதியில் சிறிலங்காப் படையினர் பரவலாக மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் போது எமைப்பிரிந்த-
வில்லியம் (கௌரிவேல் இராஜேந்திரம்- 115-ம் கட்டை- கிளிநொச்சி)

சிறிலங்கா இராணுவத்தினரின் தூண்டுதலினால் மன்னார்தீவு அகதிமுகாமிலிருந்து சமூகவிரோதக்கும்பலால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 5- தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5643)

## சிந்தனைக்கு

இன்று நாட்டுக்கு தேவைப்படுவது உழைப்பால் அழுக்கான கைநகங்களும் மேலும் தூய்மையான உள்ளங்களும்.

- தாமஸ் - ஏ. கெம்பிஸ்-

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 27- 12- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

# பேரினவாதத்தின் அரக்கத்தனம்

சிங்களப் பேரினவாதம் மீண்டும் ஒருமுறை தனது காட்டுமிராண்டித்தனத்தை உலகிற்கு வெளிக்காட்டியுள்ளது நத்தார் தினமான நேற்று முன்தினம் சிங்களப் பேரினவாதம் நடத்திய விமானக் குண்டுவீச்சில் ஒரு பெண்மணி கொல்லப்பட்டார். குழந்தைகள், சிறுவர்கள் உட்பட 16 க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். பத்து வீடுகள் வரை சேதமடைந்தன. பெருமளவு சொத்துக்களும் நாசமாகின.

போர் நடைபெறும் பிராந்தியங்களில் பண்டிகை தினங்களில் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவது உலகில் வழமையான தொன்றாகும். இதற்கு உலகில் பல பாகங்களிலும் வரலாறுகளில் இருந்து உதாரணங்களைக் காட்டலாம். தொடர்ச்சியாகமூன்று தசாப்தங்கள் நடைபெற்றவியட்னாம் போரின்போது கூட இப்பண்டிகை - நத்தார் - யின் போது யுத்தநிறுத்தங்கள் கடைப் பிடிக்கப்படுவது வழமையானதாக மாறியிருந்தது.

இன்றைய சூழ்நிலையில், அதாவது விடுதலைப் புலிகளின் நிலை பலமாக இருக்கின்ற வேளையில் யுத்த நிறுத்தம் கடைப்பிடிப்பது என்பது இராணுவ ரீதியில் சிறிலங்கா இராணுவத்திற்கும், அரசாங்கத்திற்கும் சற்று நெருக்கடியாக இருப்பதாக வைத்துக் கொள்வதாகிலும், எதுவித அறிவிப்பும் இன்றி மக்களுக்காக யுத்தமற்ற நிலை ஒன்றை அத்தினத்தில் சிங்கள அரசால் கடைப்பிடித்திருக்கமுடியும். ஆனால், சிங்களப் பேரினவாதம் யுத்தநிறுத்தம் அரசாங்கம் கடைப்பிடிக்கமாட்டாது என அறிவித்ததோடு, அதைவலியுறுத்துவதற்காகவே மேற்கொண்டது போல் ஒரு வான் தாக்குதலை நேற்று முன்தினம் நடத்தியுள்ளது.

பொதுவாகவே பண்டிகைக் காலங்களில் மக்களின் வசதி கருதி சந்தைக்குப் பெருமளவு பொருள்களை விடுவதும், போக்குவரத்திற்கென அதிகளவு பஸ், ரயில் மற்றும் போக்குவரத்துச்

# “இலங்கையில் நிலைமை மாறுகின்றது”

## புலிகளின் கை ஓங்குகின்றது

இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதை தொடர்ந்து விடுதலைப் புலிகளைக் கடுமையாக தாக்கி எழுதி வந்த ‘இந்தியா ருடே’ 1990 இல் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்ததைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் வரலாறே அஸ்தமிப்பதாகவும், சிங்கள இராணுவம் வெற்றிமேல் வெற்றிகளை குவித்து வருவதாகவும் எழுதியது. அத்தோடு, சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் இராஜதந்திரத்துக்கும் புகழாரமும் சூட்டியது. இவ்வாறாக சிங்கள பேரினவாதத்தின் வெற்றியைப் பறைசாற்றிவந்த ‘இந்தியா ருடே’ இம்மாத இதழில் அதற்கு மாறாக ‘இலங்கையில் நிலைமை மாறுகின்றது’ என்ற தலையங்கத்தில் சிங்கள இராணுவத்தின் தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் சிறு கட்டுரை ஒன்றைப் பிரசுரித்துள்ளது. இச் கட்டுரையின் பெரும்பகுதியை இங்கே தருகிறோம்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் பலமாதங்களாகக் கட்டிக்காத்துவந்த மன உறுதியைஒரேஒரு கொலை மூலம் புலிகள் அசைத்திருப்பதாகத் தான் தோன்றுகிறது. கடற்படைத்தளபதி கிளான்சி பெர்னாண்டோ கொழும்பின் மத்திய பகுதியில் மனித வெடிகுண்டைப் பயன்படுத்திக் கொன்றதால் ஏற்பட்டபயம், கிரிக்கெட் விளையாட வந்த நியூசிலாந்து அணி அநேகமாக திரும்பிப்போய்விடும் அளவிற்கு இருந்தது. தமிழ்ப்போராளிகளுடனான பத்தாண்டு காலப்போரில் வெற்றியை நெருங்கிவிட்டதாக அதுவரை கருதப்பட்ட இராணுவம் நிலை குலைந்தது.

புலிகளுக்கு எதிரான பல நடவடிக்கைகளின் கதாநாயகர்களாகக் கொண்டாடப்பட்ட வடபகுதி இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவ, யாழ்ப்பாண தீபகற்பத் தளபதி விஜய விமலரட்ணா உள்ளிட்ட ஒரு டஜன் இராணுவ உயர் அதிகாரிகள் சில வாரங்களுக்கு முன்பு நடந்த தாக்குதலின் போது கொல்லப்பட்டார்கள் இதைத்தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் புலிகளின் சமீபத்திய வெற்றி வடக்கு, யாழ்பபாணத்தின் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளை அபாயத்திற்கு உள்ளாக்கியிருக்கின்றது. தமிழ்த்தீவிரவாதிகளுக்கு எதிரானபோரில் முக்கியபங்கு வகித்தவர் கிளான்ஸி பெர்னாண்டோ. கடல் வழிகளை அடைத்ததன்மூலம் அவர்களுக்கு நெருக்கடியை அதிகரித்தவர் அவர். மோட்டார் சைக்கிள் நிறைய வெடி குண்டுகளை நிரப்பிக்கொண்டு கொலையாளி பெர்னான்டோவின் மீது நேரடியாகச் சென்று மோதியதில் அவர் சுக்குநூறாகச் சிதறிப் போனார்.

இந்தப் பதிலடி, தாக்கி விட்டு ஓடும் பல புலிகளின் தாக்குதல்களுக்கு வெற்றி சேர்ப்பதாக அமைந்திருக்கிறது. அது ஆறு மாதங்களில் 700க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களை பதுங்கி இருந்து தாக்கிக்கொன்றிருக்கிறது.

பலத்த உயிர்ச் சேதத்தால் ராணுவம் தள்ளாடுகிறது. துருப்புக்களை ஏற்றிச் செல்வதற்காக வடிவமைக்கப்பட்ட வை - 12, வை - 8 ரகச் சீன விமானங்களை மாற்றி அமைத்து குண்டுவீச்சு நடத்த விமானப்படை பயன்படுத்தி வந்தது. இவற்றில் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. கப்பற்படையும் குறைந்த அளவு கப்பல்களோடுதான் செயல்பட்டு வந்திருக்கிறது. இரண்டுகப்பல்களில் ஒன்று கடலில் மூழ்கியது. அதைத்தவிர ராணுவம் இந்த வருடம் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை இழந்திருக்கிறது. 1983-1987 - ல் ஏற்பட்ட இழப்பைவிட இது அதிகம். அதைவிட ராணுவத்தினர் குறிப்பாக - கொப்பேகடுவவின் மரணத்திற்கு - படையை விட்டு ஓடிப்போய் விடுவதுதான் மோசம். இந்த ஆண்டு 6,000 ராணுவத்தினர் ஓடிப்போய்விட்டதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. தீவிரம் குறைந்து, நீண்ட காலமாகப் போர் நடப்பதால் செலவு அதிகரித்திருப்பது குறித்து அரசு இப்போது கவலைப்படுறது.

கொழும்பில்பெர்னாண்டோ கொல்லப்பட்டது வியாபார, தொழில் துறை வட்டாரங்களைக் கவலை கொள்ளச் செய்திருக்கிறது. பொருளாதாரத்துறை, தொழில்துறை வளர்ச்சியில் பிஸியாக இருந்த தென்பகுதி போராட்டத்திலிருந்து மனதளவில் விலகியே இருந்தது. ஆனால் இப்போது தீவிரவாதம் கொழும்புவரை வந்திருப்பதால் இது மாறலாம்.

இந்த இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காண வேண்டும் என்ற எண்ணம் முன் எப்போதையும் விட இப்போது அதிகமாக உணரப்படுகிறது. ஆனால் தீர்வுகள் சுலபமானதாக இல்லை. எனவேதான் அடுத்த குண்டு எப்போது வெடிக்குமோ என்றபயத்தில்வாழ்க்கை நடந்து கொண்டிருப்பதும் தான் கசப்பான உண்மைகள்.

—நன்றி: ‘இந்தியா ருடே’

# உணவுப் பற்றாக் குறையும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்

### தொழிற்பாடுகளும் பற்றாக்குறையினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்

காபோவைதரேற்று. அன்றாட வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் அத்தியாவசியமாகும் இதன் 1 கிராம் 4.2கி கலோரி சக்தியைக் கொடுக்கின்றது. இது மனிதனுடைய உணவில் 40-50 சதவீதத்தைக் கொண்டிருக்கவேண்டும். புரதச்சத்து என்பதில் அமினோ அமிலங்கள் உண்டு. இவையே உடலில் உள்ள தசை நார்களையும் ஏனைய கலங்களையும் கட்டி எழுப்புவதற்கு அடிக்கற்களாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இவற்றில் இரண்டு வகை உண்டு ஒன்று Essential Amino Acids (EAA) இவை கட்டாயமாக உணவாகக் கொடுக்கப்படல் வேண்டும் ஏனெனில் இவை மனித உடம்பில் உற்பத்தி செய்யப்பட முடியாதவை. அதே போன்ற Non-essental Amino Acids என்றிருககிறது. இவை உணவிலிருந்து கிடைக்காவிட்டாலும் உடல் தயாரித்துக் கொள்ளும். இவை மீன், இறைச்சி,

### கனிப்பொருள் பற்றாக் குறையினால் ஏற்படும் ஆபத்துக்கள்:-

இரும்புச்சத்து, கீரை இறைச்சி, மீன், பழவகைகள், சோயா என்பவற்றில் அதிகளவிலுள்ளது இது வளருகின்ற பிள்ளைகளுக்கும் மாதவிடாய் ஏற்படுகின்ற பெண்களுக்கும் கர்ப்பிணித்தாய்மாரிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் மிக அவசியமாகும். இதன் பற்றாக்குறைவி

—6—

னால் இரத்தச்சோகை (Anaemia) ஏற்பட்டு பிள்ளைகளுக்கு சோர்வு ஏற்பட்டு அடிக்கடி நோய்களும் ஏற்படும். குழந்தைகளின் எலும்பு வளர்ச்சிக்கும் பல் வளர்ச்சிக்கும்

னால் கழலை (Goitre) ஏற்படும். அத்துடன் சோர்வும், சோம்பலும் பசியின்மையும், நோய்களும் ஏற்படும். வயதுக்கு வந்த பெண்களுக்கும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் இதன் தேவை அதிகரித்துக்காணப்படும் இது மீனிலும் கருவாடுகளிலுமுண்டு. சிங் (Zinc) மனிதனின் கருப்பொருள் [Dna] உற்பத்தியில் பங்கேற்கிறது. எனவே குழந்தைகளின் வளர்ச்சிக்கு இது மிக அவசியமாகும். இது அரிசிச் சோறு-மரக்கறி-மீன் என்பவற்றில்போதியளவுண்டு. சுத்தமான இரத்த உற்பத்திக்கு செப்பு (Copper) (Haemopoiesis) அவசியமாகும் மக்னீசியம் உடலிலுள்ள பல நொதியங்களின் (Snzymes) தொழிற்பாட்டிற்கு இன்றியமையாதது. ஃபுளோரீன் பற்களின் வளர்ச்சிக்கு அவசியம் இது நீரிலுண்டு.

எனவே இப்படியான எதுவும் குழந்தைகளுக்கு ஏற்படும் போது ஆரம்பத்திலேயே கவனிக்கப்படவேண்டும்.

விற்றமின் B

B-1 சக்தி உற்பத்திச் சக்கரத்திற்கு (Krebs cycle) மிக அவசியமாகும்இதுதவிட்டுடன் கூடிய அரிசி, கஞ்சி, பன்றி இறைச்சி மாமயிட், கடலைகள் என்பவற்றிலுண்டு. இதன் குறைபாட்டில் தோல் காய்ந்து சிரங்கு போன்று ஏற்படும் இதில் (Wet Beriberi Dry Beriberi) என இரு வகை உண்டு சோர்வு ஏற்பட்டு மனச்சோர்வு கூட ஏற்படும் நியாசின் (Niacin) குறைபாட்டினால் தோலில் பெலகரா (Pell-agra என்கிற நோய் ஏற்

**சீர்மாறன்**

(Seurvy) என்கின் முரசு கரைதல். வாய்ப்புண் ஏற்படுதல் என்பன ஏற்படும் மேலும் குழந்தைகளில் சோர்வு பசியின்மை கை கால்களில் வலி என்பன ஏற்படும்.

விற்றமின் D

இது மீனில் ஈரல் (Cod Liver oil) முட்டை, ஈரல் என்பவற்றிலுண்டு. இது குழந்தைகளின் எலும்பு வளர்ச்சிக்கு மிக அவசியமாகும். இதன் குறைபாட்டினால் எலும்பு வளைதல்; முறிதல் (Rickets) என்பன ஏற்படும். விற்றமின் E,K குறைபாட்டினால் இரத்தச்சோகை, இரத்தப்பெருக்கு என்பன ஏற்படும்

அத்துடன் குழந்தைகளுக்கு 3-6 மாதங்களுக்கொருமுறை பூச்சி மருந்து (Combantrin or Vermox) கொடுக்கப்படல் வேண்டும்.

வழமையானதாக மாறியிருந்தது.

இன்றைய சூழ்நிலையில், அதாவது விடுதலைப் புலிகளின் நிலை பலமாக இருக்கின்ற வேளையில் யுத்த நிறுத்தம் கடைப்பிடிப்பது என்பது இராணுவ ரீதியில் சிறிலங்கா இராணுவத்திற்கும், அரசாங்கத்திற்கும் சற்று நெருக்கடியாக இருப்பதாக வைத்துக் கொள்வதாகிலும், எதுவித அறிவிப்பும் இன்றி மக்களுக்காக யுத்தமற்ற நிலை ஒன்றை அத்தினத்தில் சிங்கள அரசால் கடைப்பிடித்திருக்கமுடியும். ஆனால், சிங்களப் பேரினவாதம் யுத்தநிறுத்தம் அரசாங்கம் கடைப்பிடிக்கமாட்டாது என அறிவித்ததோடு, அதைவலியுறுத்துவதற்காகவே மேற்கொண்டது போல் ஒரு வான் தாக்குதலை நேற்று முன்தினம் நடத்தியுள்ளது.

பொதுவாகவே பண்டிகைக் காலங்களில் மக்களின் வசதி கருதி சந்தைக்குப் பெருமளவு பொருள்களை விடுவதும், போக்குவரத்திற்கென அதிகளவு பஸ், ரயில் மற்றும் போக்குவரத்துச் சேவைகளை நடத்துவது வழமையான நடவடிக்கையாகும். இது தனது நாட்டு மக்களுக்கென அரசாங்கங்கள் மேற்கொள்ளும் விசேட நடவடிக்கைகள் ஆகும். ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ தமிழ் மக்களைத் தமது பிரஜைகள் எனக் கூறுவதில் மட்டும் அக்கறை கொண்டுள்ளது. ஆனால், அவர்களின் பண்டிகைக் காலங்களில் செய்ய வேண்டிய எந்தவித விசேட சலுகைகளையும் ஏன் வழமையான நடவடிக்கைகளைக் கூடச் செய்வதில்லை.

மாறாக, பண்டிகைக் காலமெனத் தெரிந்திருந்தும், தமிழ் மக்கள் பெரும் துன்பத்துடன் பயணம் செய்யும் கிளாலிக் கடற்பரப்பில் தாக்குதல்களை நடத்தியது. இதனால் பல்வேறு காரணங்களுக்காக குடாநாட்டிற்கு வெளியில் சென்றவர்கள் பண்டிகையின் போதுதானும் வீட்டிற்கு வரமுடியாது தடைசெய்து விட்டிருந்தது.

இந் நிலையில் தான், தினசரி இரண்டு பொதுக் கூட்டங்களில் தானும் பேசிவரும் சிறிலங்கா ஜனாதிபதி, இலங்கையில் உள்ள பிரஜைகள் சகலரும் சமமானவர்கள், அரசாங்கம் சகலருக்கும் சம உரிமைகளை வழங்கியுள்ளது என அரசியலமைப்புச் சட்டத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றார். சிறுபான்மையினருக்கும் சகலதையும் வழங்கியுள்ளோம் எனக்காட்ட முற்படுகின்றார்.

அத்தோடு இனப்பிரச்சினை தீர்விற்கு எவரும் கட்சி வேறுபாடுகளையும் இன, மத வேறுபாடுகளையும் மறந்து தீர்வு காண முற்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து வருகின்றார். மேலும், புத்த பிரானினதும் யேசு கிறிஸ்துவினதும் அன்பு, கருணை பற்றிய போதனைகளைப்பற்றியும், ஆபிரகாம் லிங்கன் மகாத்மா காந்தி போன்றவர்களின் கொள்கைகள் பற்றியும் பிரசாரம் புரிகிறார்.

இவ்வாறு மிலேச்சத்தனமான மனிதாபிமானம் அற்றவர்களும் ஏனைய மதத்தினரையும் இனத்தினரையும் தமது அடிமைகளாகவும் மதிக்கும் சிங்களப் பேரினவாதிகள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை காண்பார்களென யாராவது எண்ணுவார்களேயானால் அவர்கள்போன்று கற்பனையுலகில் சஞ்சரிப்பவர்கள்வேறு யாருமே இருக்க முடியாது. இதனை இலங்கையில் உள்ள சிறுபான்மை இன மக்கள் மட்டுமல்ல, சிறிலங்காவிற்கு ஆயுதங்களை வழங்கும் உலகிலுள்ள கிறிஸ்தவ நாடுகளும் புரிந்து கொள்ளுதல் நல்லது.

இது மனிதனுடைய உணவில் 40-50 சதவீதத்தைக் கொண்டிருக்கவேண்டும். புரதச்சத்து என்பதில் அமினோ அமிலங்கள் உண்டு. இவையே உடலில் உள்ள தசை நார்களையும் ஏனைய கலங்களையும் கட்டி எழுப்புவதற்கு அடிக்கற்களாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இவற்றில் இரண்டு வகை உண்டு ஒன்று Essential Amino Acids (EAA) இவை கட்டாயமாக உணவாகக் கொடுக்கப்படல் வேண்டும் ஏனெனில் இவை மனித உடம்பில் உற்பத்தி செய்யப்பட முடியாதவை. அதே போன்ற Non-essental Amino Acids என்றிருக்கிறது. இவை உணவிலிருந்து கிடைக்காவிட்டாலும் உடல் தயாரித்துக் கொள்ளும். இவை மீன், இறைச்சி, முட்டை, சோயா, பருப்பு, உழுந்துவகைகள் என்பவற்றிலுமுண்டு புரதச் சத்துக்குறைவினால், வளர்ச்சி குன்றியும் (உடலும் மூளையும்) அடிக்கடி நோய் ஏற்படும் ஆபத்துமுண்டு. கொழுப்புச்சத்து என்பதில் கொலஸ்ட்ரோலும் அடங்கும். இதுவும் பெரும்பாலும் சக்திக்கே பயன்படுகிறது ஒரு கிராம் கொழுப்பு = 9 கி.கலோரி சக்தியைக்கொடுக்கின்கிறது. புரதம் ஒரு கிராமிற்கு — 4 கி.கலோரியைக் கொடுக்கின்றது.

குறையினால் ஏற்படும் ஆபத்துக்கள்:-

இரும்புச்சத்து, கீரை இறைச்சி, மீன், பழவகைகள், சோயா என்பவற்றில் அதிகளவிலுள்ளது இது வளருகின்ற பிள்ளைகளுக்கும் மாதவிடாய் ஏற்படுகின்ற பெண்களுக்கும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் மிக அவசியமாகும். இதன் பற்றாக்குறைவி



னால் இரத்தச்சோகை (Anaemia) ஏற்பட்டு பிள்ளைகளுக்கு சோர்வு ஏற்பட்டு அடிக்கடி நோய்களும் ஏற்படும். குழந்தைகளின் எலும்பு வளர்ச்சிக்கும் பல் வளர்ச்சிக்கும் கல்சியம் மிக அவசியமானதாகும். அத்துடன் காயங்கள் ஏற்படும்போது இரத்தம் பெருகாமல் குருதி உறைதல், (bloodCotting) நரம்புத் தொழிற்பாடு Neural Conduction) என்பவற்றிற்கும் அவசியமாகிறது. இது பால் முட்டை, கீரை வகைகள் — அகத்தி, முருங்கை இலை என்பவற்றில் நிறைய உண்டு. கழுத்திலுள்ள தைரோயிட் (Thyroid gland) டின் தொழிற்பாட்டிற்கு அயடீன் மிகவும் அவசியமானதாகும். இதன் பற்றாக்குறையி

சோம்பலும் பசியின்மையும், நோய்களும் ஏற்படும். வயதுக்கு வந்த பெண்களுக்கும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் இதன் தேவை அதிகரித்துக்காணப்படும் இது மீனிலும் கருவாடுகளிலுமுண்டு. சிங் (Zinc) மனிதனின் கருப்பொருள் [Dna] உற்பத்தியில் பங்கேற்கிறது. எனவே குழந்தைகளின் வளர்ச்சிக்கு இது மிக அவசியமாகும். இது அரிசிச் சோறு-மரக்கறி-மீன் என்பவற்றில்போதியளவுண்டு. சுத்தமான இரத்த உற்பத்திக்கு செப்பு (Copper) (Haemopoiesis) அவ்சியமாகும் மக்னீசியம் உடலிலுள்ள பல நொதியங்களின் (Snzymes) தொழிற்பாட்டிற்கு இன்றியமையாதது. ஃபுளோரீன் பற்களின் வளர்ச்சிக்கு அவசியம் இது நீரிலுண்டு.

விற்றமின் பற்றாக் குறையினால் ஏற்படும் ஆபத்துக்கள் (VITAMIN DEFICIENCY)

விற்றமின் A [RETINOL]

கரட், இறைச்சி, பால், முட்டை, என்பவற்றிலுண்டு இதன் குறைபாட்டினால் மாலைக்கண் நோய் (Night blindness), கண்களில் புள்ளி (Xerophthalmia) கண்களில் குருட்டுத்தன்மை (Keratomalacia) என்பன கூட ஏற்படும்

போது ஆரம்பத்திலேயே கவனிக்கப்படவேண்டும்.

விற்றமின் B

B-1 சக்தி உற்பத்திச் சக்கரத்திற்கு (Krebs cycle) மிக அவசியமாகும் இது தவிட்டுடன் கூடிய அரிசி, கஞ்சி, பன்றி இறைச்சி மாமயிட், கடலைகள் என்பவற்றிலுண்டு. இதன் குறைபாட்டில் தோல் காய்ந்து சிரங்கு போன்று ஏற்படும் இதில் (Wet Beriberi Dry Beriberi) என இரு வகை உண்டு சோர்வு ஏற்பட்டு மனச் சோர்வு கூட ஏற்படும் நியாசின் (Niacin) குறைபாட்டினால் தோலில் பெலகரா (Pellagra என்கிற நோய் ஏற்படும். இது ஈரல், மீன், இறைச்சி, கோப்பி, கச்சான்கடலை என்பவற்றிலுண்டு ரைபோபிலோவிர் (Riboflavin) ஈரல் பால், தயிர், முட்டை, காளான் என்பவற்றிலுண்டு இதன் குறைபாட்டால், வாயில் புண்கள் அடிக்கடி ஏற்படும் (Angular Stomatitis)

**சீர்மாறன்**

விற்றமின் C

இது நெல்லி மரக்கறிகள் உருளைக்கிழங்கு தோடம்பழம் என்பவற்றில் உண்டு இதன் குறைபாட்டினால் ஸ்கேர்வி

என்பன ஏற்படும் மேலும் குழந்தைகளில் சோர்வு பசியின்மை கை கால்களில் வலி என்பன ஏற்படும்.

விற்றமின் D

இது மீனில் ஈரல் (Cod Liver oil) முட்டை, ஈரல் என்பவற்றிலுண்டு. இது குழந்தைகளின் எலும்பு வளர்ச்சிக்கு மிக அவசியமாகும். இதன் குறைபாட்டினால் எலும்பு வளைதல்; முறிதல் (Rickets) என்பன ஏற்படும். விற்றமின் E, K குறைபாட்டினால் இரத்தச்சோகை, இரத்தப்பெருக்கு என்பன ஏற்படும்

அத்துடன் குழந்தைகளுக்கு 3-6 மாதங்களுக்கொருமுறை பூச்சி மருந்து (Combantrin Or Vermox) கொடுக்கப்படல் வேண்டும்.

தடுப்பூசி போடுதல்

இதுவே மிகமிக முக்கியம். குழந்தைபிறந்தவுடன் பி.சி.ஜி [B.C.G] யு-ம் 3-ம் 5-ம் 7-ம், மாதங்களில் முக்கூட்டுஊசியும் (Dpt-Triple Vaccine) போலியோவும் 9ம் மாதத்தில் கூவைக்கட்டு ஊசியும் பின்பு 18ஆம் மாதத்தில் முக்கூட்டு ஊசியும் போலியோவும் மீண்டும் ஐந்து வயதில் பாடசாலைக்கு போகும்போது மீண்டும் ஒரு ஏற்பூசியும் (Tetanus Toxvid) போடுதல் மிக மிக அவசியமாகும்.

## வெளியேற்றப்பட்ட பாலஸ்தீனியருக்கு உணவு கொண்டு செல்ல இஸ்ரேலிய அரசு தடைவிதிப்பு

[டெல்அவிவ்]

நாடுகடத்தப்பட்ட நானூறு பாலஸ்தீனியர்களுக்கும் தனது பிரதேசம் வழியாக உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திற்கு இஸ்ரேல் அனுமதிமறுத்துவிட்டது இஸ்ரேலிய அமைச்சரவை நேற்று முன்தினம் கூடி இது விடயம் பற்றி விவாதித்தபோது நாடுகடத்தப்பட்ட பாலஸ்தீனியர் தற்போது லெபனான் பிரதேசத்தில் இருப்பதால் இது லெபனான் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று முடிவுஎடுத்துள்ளது.

இதேவேளை நாடுகடத்தப்பட்ட பாலஸ்தீனியர்களைக் கவனிப்பது டெல்அவிவின் பொறுப்பேயாகும் என்று லெபனான் பிரதமர் ரபீகே கற்ரீ மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

## வெளியேற்றப்பட்டோரை லெபனான் ஏற்க வேண்டும்

### - இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

(டெல்அவிவ்)

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பாலஸ்தீனியரை லெபனான் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், அவர்களை மீண்டும் இஸ்ரேலுக்குள் அனுப்ப முயற்சித்தால் அது பெரும் தவறாகும் என்றும் இஸ்ரேல் பிரதமர் யிட்சாக் ராபின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை நாடு கடத்தப்பட்ட நானூறு பாலஸ்தீனியர்களும் நான்காவது நாளாக பனி படர்ந்த மலைப் பகுதியில் தங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் கலவரம்

குஜராத் மாநிலத்தில் மீண்டும் வன்முறை தலைதூக்கியுள்ளது அதனால்கடந்தவியாழன் இரவு அகமதாபாத் நகரில் ஊரடங்கு பிரகடனப்படுத்தப்பட்டது. மூவீறுபேர் உயிரிழந்தனர்.

கடைகளுக்கும்வீடுகளுக்கும் தீவைக்கப்பட்டது. கூட்டத்தைக்கலைக்கப்பொலிசார்கண்ணீர்க்குண்டு பிரயோகம் செய்து வானை நோக்கி சுட்டனர்.

அயோத்தியில் பாபர்மசூதி இடிக்கப்பட்டதைத் எதிர்த்து முஸ்லிம்கள் கதவடைப்பும், வேலை நிறுத்தமும் செய்ததால் இந்த வன்முறைச் சம்பவங்கள் ஆரம்பித்தன.

பொஸ்னியாவின்

## ஐ. நா. படை அலுவலகத்தை மூடுவதற்கு ஆலோசனை

(சரயேவோ)

சரயேவோ நகரிலிருக்கும் ஐ. நா. அமைதிப்படையின் தலைமையகம் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதால் அவ் அலுவலகத்தை மூடி விடுவது பற்றி ஐ. நா. படை அதிகாரிகள் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. இங்கிருக்கும் ஐ. நா. அமைதிப்படை அதிகாரியான லெப். ஜெனரல் சதீஸ் நம்பியார், மேஜர் ஜெனரல் பிலிப் மெறிபாஜ் ஆகியோரது இல்லங்கள் மோட்டார்ரகப் பீரங்கிகளால் தாக்கப்பட்டன. எனினும் இவ் அதிகாரிகள் காயமேதுமின்றித் தப்பிக்கொண்டனர்.

## இந்தியப் பிரதமர் ராவ் திங்களன்று தமிழக விஜயம்

(சென்னை)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நாளை திங்களன்று தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளார், கன்னியா குமரியில் நடைபெற இருக்கும் சுவாமி விவேகானந்தரின் பாரத் பரிக்கிரமா நூற்றாண்டைத் தொடங்கி வைப்பதற்காக வரும் பிரதமருடன் மத்திய மாநில மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங்கும் வருகைதர வுள்ளார். இந்த விழாவில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் கலந்துகொள்ள இருக்கிறார்.

## கையெழுத்து இயக்கம்

(டில்லி)

இந்திய தேசிய ஒற்றுமைக்கான 11 கட்சிகள் கொண்ட குழு கையெழுத்து இயக்கம் ஒன்றை மேற்கொள்ள உள்ளது புதுடில்லியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

ஈழநாதம்

# மாநிலங்களுக்கு அதிகாரமில்லை; புதிய அரசியல் யாப்பு வேண்டும்

## அ. தி. மு. க பொதுக்குழு தீர்மானம்

[சென்னை]

மாநில அரசுகளுக்குத் தக்க அதிகாரம் இல்லை என்றும், மத்திய அரசு எஜமான் போல் செயல்படுகிறது என்றும், இந்த நிலைமையை இல்லாமல் செய்வதற்கு அதிகாரப் பரவலாக்கம் வேண்டும் என்றும், தேவைப்பட்டால் புதிய யாப்பொன்றை உருவாக்க புதிய அரசியல் சட்ட நிர்ணய சபையை உண்டாக்க வேண்டும் என்றும் ஆளும் கட்சியான அ. இ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது

நேற்று முன்தினமும், நேற்றும் சென்னையில் கட்சியின் பொதுக் குழு இருபத்தாறு தீர்மானங்களை நிறைவேற்றியது. அதில் பல நரசிம்மராவ்வின் அரசுக்கு எதிரானவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசியல் சட்டத்தின் கீழ் மாநில சட்ட மன்றத்தைக் கலைத்து விடுவோம் என்று மத்திய அரசு அடிக்கடி அச்சுறுத்திவரும் 356 வதுஷரத்து நீக்கப்பட வேண்டும் என்றும் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மத்திய அரசு மாநில அரசுக்கு அறிவிக்காமல் இராணுவத்தை அனுப்பியிருப்பதாகவும், அது ஜனநாயகத்திற்கு எதிரான செயலென்றும் கூறுகிறது. தமிழகத்தில் இதனால் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் இத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது ஆகையால் பொதுக் குழு மத்திய அரசைக் கண்டிப்பதாகவும் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது

இந்தி மொழி பற்றியும் பொதுக் குழு இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. மத்தியில் பதினேழு தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதோடு. தமிழகத்தில் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களில் இந்தி மொழி திணிக்கப்படுவதாகவும் கூறியுள்ளது

பாபர் மசூதி தகர்க்கப்பட்டிருந்த போது செயலற்றிருந்த உத்தரப் பிரதேச அரசைக் கலைத்தது சரியானது என்று கூறும் ஓர் தீர்மானம் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி புரிந்த மத்தியப் பிரதேசம், ஹிமாலயப் பிரதேஸ், ராஜஸ்தான் ஆகிய மாநில அரசுகளைக் கலைத்தது கட்சி அடிப்படையில் நடந்தசெயல் என்று கண்டிக்கிறது

தமிழகத்தில் நடைபெறும் எந்தத் தேர்தலிலும் அ. இ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் ஐக்கிய முன்னணி அமைத்துக் கொள்வது பற்றி சுயேட்சையாக முடிவெடுக்கும். முழு அதிகாரமும் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சென்ற சட்டப் பேரவைத் தேர்தலில் தேர்தல் ஐக்கிய முன்னணி மகத்தான வெற்றி பெற்றதற்குச் செல்வி ஜெயலலிதாவின் தலைமையை ஒரு தீர்மானம் பாராட்டியிருக்கிறது.

புதுவைக்குத் தனி மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் கூறுகிறது.

இந்த இரண்டுநாள் பொதுக் குழுக் கூட்டத்தில் இந்திரா காங்கிரஸ் அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என உறுப்பினர்களும், அமைச்சர்களும் கேட்டுக் கொண்டனர்.

## இராணுவத்தை வாபஸ் பெறாவிட்டால் தமிழ்நாடு பஞ்சாப் ஆகும்

### அ. தி. மு. க. எச்சரிக்கை

(சென்னை)

தமிழ் நாட்டுக்கு மத்திய அரசு அனுப்பியுள்ள துருப்புகளை மீள அழைக்காவிட்டால் தமிழ் நாடு மாநிலத்தில் 25 லட்சம் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் பிந்தரன்வாலாவாக - சீக்கிபப் போராளியாக மாறி இராணுவத்தோடு போராடத் தயங்க மாட்டார்கள் என்று அ. இ அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் அறிவித்துள்ளது.

இப்படியான படை அனுப்பும் விஷயங்களால் எமது முதல்வர் ஜெயலலிதாவைப் பயமுறுத்தி விடலாம் என்று மத்திய அரசு தப்புக்கணக்குப் போட்டிருப்பதாக சமூக நலத்துறை அமைச்சர் இந்திரா குமாரி நேற்று நடை பெற்ற பொதுக்குழுக்கூட்டத்தில் பேசினார்.

# மொகலாயர் தவறுகளை முஸ்லிம்கள் காக்கக்கூடாது

## பாரதீய ஜனதா கோரிக்கை

(டில்லி)

இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்தியாவை ஒரு இந்து நாடாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் திட்டமும் தமக்கு இல்லை எனப் பாரதீய ஜனதாக்கட்சி அறிவித்திருக்கிறது.

புதுடில்லியில் நேற்றுக் கூடிய பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மேலும் இந்தியாவுக்குள் ஊடுருவிய முகலாய மன்னர்கள் இழைத்திருக்கும் தவறுகளைக் கட்டிக்காக்க இந்திய முஸ்லிம்கள் முயலக் கூடாது என்று பாரதீய ஜனதாக்கட்சி முஸ்லிம்களைக் கேட்டுள்ளது.

அடுத்த வருடத் தொடக்கத்தில் ஐந்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொள்ளும் பேரணியை நடத்தப்போவதாகவும் பாரதீய ஜனதாக்கட்சி அறிவித்துள்ளது. ராமர் ஆலயம் எழுப்ப தமது ஆதரவை வெளிப்படுத்தவே இந்த மாபெரும் பேரணி என்று அக்கட்சி கூறுகிறது.

இதேவேளை பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்ட ராமர் கோவிலில் வழிபாடு நடத்த அரசு அனுமதித்தால் தாம் போராட வேண்டிவரும் என்றும், முஸ்லிம்களும் பேரணியாகச் சென்று பாபர் மசூதி இருந்த இடத்தில் தொழுகை நடத்த வேண்டிவரும் என்றும் பாபர் மசூதி பாதுகாப்புக் குழு அரசை எச்சரித்துள்ளது.

## தாஜ்மஹாலுக்கு பாதுகாப்பு தாக்கப்படலாமென அச்சம்

(டில்லி)

தாஜ்மஹால் இந்து அடிப்படை வாதிகளால் தகர்க்கப்படலாம் என்ற அச்சத்தினால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சலவைக்கற்களினால் அமைக்கப்பட்ட தாஜ்மஹால் மொகலாய மன்னர் ஷாஜஹானால் அவரது மனைவி மும்தாஜ் மகால் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது.

14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக் கட்டடம் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கணிக்கப்படுகிறது.


யாழ். திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
"கிறிஸ்மஸ் இராகங்கள்"
(இசை நிகழ்ச்சி)
இடம்:- மன்ற அரங்கு, பிரதான வீதி
காலம்:- 27-12-92 மாலை 6.00 மணி
பிரவேசம்: இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
C. M. நெல்சன்
செயலாளர்
(சி/5661)



பற் சிகிச்சை நிலையம்
(கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிரில்)
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்
பார்வையிடும் நேரம்:
தினசரி:- 4-00 பி. ப. - 6-00 பி. ப.
ஞாயிறு:- 10 மு. ப. — 12 ந. ப.
(3241)


மாணவ அறிவித்தல்கள்

## வீரச்சாவு



கப்டன் கல்கி

## குமாரி

சேவையில் ஈடுபடுத்தப்படும். இடைநிறுத்தப்பட்ட "குமாரி" என்ற கப்பலுக்குப் பதிலாக அடுத்த ஆண்டுமுதல் புதிய கப்பல் ஒன்று சேவையில் அமர்த்தப்படும். இக்கப்பலைச் சேவைக்கு அமர்த்தும் முதல் கட்ட முயற்சியாக கப்பல் சொந்தக்காரர்களிடமிருந்து கேள்விபபத்திரங்களை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கோரியிருக்கிறார். இப்புதிய கப்பல் அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


குடா நாட்டுக்கான கப்பல் சேவையை இடைநிறுத்தப் போவதாக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து இக்கப்பல் சேவையை சீராக்கும் முகமாக யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. பத்மநாதன் கொழும்பு விரைந்தார் கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் நாயகம் மற்றும் ஏனைய உயர்அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து மேற்படி முடிவு மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு

## மாவட்ட

வுத்திட்ட இணைப்பு, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு என்பன தொடர்ந்தும் மாவட்ட அடிப்

முதலாம்

## ஆண்டு நினைவஞ்சலி



எமது குடும்ப குல விளக்கு

அமரர் திரு. இராசையா கந்தசாமி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(சி/5661) C. M. நெல்சன்
செயலாளர்


# பற் சிகிச்சை நிலையம்

(கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிரில்)

கே. கே. எஸ். வீதி, கொக்குவில்

பார்வையிடும் நேரம்:

தினசரி:- 4-00 பி. ப. – 6-00 பி. ப.

ஞாயிறு:- 10 மு. ப. — 12 ந. ப.

(3241)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா பராசக்தி

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை சேர்ந்த கந்தையா பராசக்தி அவர்கள் 28 - 11 - 1992 அன்று புங்குடுதீவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா ( கு. க ) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதிகளின் மூத்தமகளும், குமரேசர்தம்பதிகளின் மருமகளும், சண்முகலிங்கம் ( பிரான்ஸ் ) மகாலிங்கசிவம் ( கனடா ) புவனேஸ்வரி ( கனடா ) ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரெட்ணராஜா (கனடா) மிதுனரதிதேவி (பிரான்ஸ்) சிவராணி நோனா - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கார்த்திகேசு, காலஞ்சென்ற நாகேஸ், பசுபதிப்பிள்ளை, காலஞ்சென்ற தாமோதரப்பிள்ளை (ஆசிரியர்) கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் (ராசு) சற்குணம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற நாகம்மா, காலஞ்சென்ற கணேசபிள்ளை செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்.
சகோதரர்கள்.

பெற்பதி வீதி,
கொக்குவில். (3866)

## திருமதி பாலாமணி பரஞ்சோதி

(கோவளம் காரைநகர்)

காரைநகர் கோவளத்தைச் சேர்ந்தவரும் தற்போது ஓட்டுமடம் ஒஸ்மானியாக் கல்லூரி வீதியில் வசித்தவருமாகிய பாலாமணி பரஞ்சோதி நேற்று முன்தினம் (25-12-92) காலமானார். அன்னார் மு பரஞ்சோதியின் அன்பு மனைவியும், திருவருட்செல்வி, திருவருட்செல்வன், திருநீலகண்டன், வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், க. கணேசலிங்கத்தின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று காலை பத்து மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஒஸ்மானியா வீதி, தகவல்
ஓட்டுமடம். கணவன் மு. பரஞ்சோதி
3870)

---

அரசை எச்சரித்துள்ளது.

## வீரச்சாவு



கப்டன் கல்கி



லெப். அமுதன்



லெப், மருதன்
(வித்திரா)

24-12-92 அன்று மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது நடாத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில் வீரச்சாவடைந்த கப்டன் கல்கி (ருக்மணி தாமோதரம், 2ம் வாய்க்கால் கிளிநொச்சி), லெப்டினன்ட் அமுதன் (சடையன் தர்மலிங்கம் 4ம் கண்டம் பல்குளம்), லெப்டினன்ட் மருதன் (வித்திரா (மாணிக்கபோடி அருட்சிவம், முனைக்காடு கொக்கட்டிச்சோலை) ஆகியோரது நேற்று பிரசுரமாகிய படங்கள் தெளிவின்மையால் மீள் பிரசுரம் செய்யப்படுகிறது.

---

யாளர்கோரியிருக்கிறார். இப் புதிய கப்பல் அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடா நாட்டுக்கான கப்பல் சேவையை இடை நிறுத்தப் போவதாக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து இக் கப்பல் சேவையை சீராக்கும் முகமாக யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. பத்மநாதன் கொழும்பு விரைந்தார் கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் நாயகம் மற்றும் ஏனைய உயர்அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து மேற்படி முடிவு மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு சென்றிருந்த திட்டப்பணிப்பாளர் விமானமூலம் நேற்று யாழ்ப்பாணத்திற்கு திரும்பியிருக்கிறார்.

அதேவேளை குடாநாட்டுக்கான உணவுப்பொருள்களுக்குரிய பணத்தை தொடர்ந்தும் யாழ். செயலகமே வழங்க வேண்டியுள்ளது என்று யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (க)

---

பச்சிளம்

பற்ற நிறுவனங்களோ எந்த வகையான உதவிகளையும் செய்வதில்லையென்று இம் முகாமைச் சேர்ந்த மக்கள் கவலை தெரிவித்தனர்.

இங்கு வாழும் சுமார் 765 குடும்பங்களுக்கு மட்டுமே வாராந்த அரச உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. மிகுதியாக உள்ள சுமார் 150 குடும்பங்களுக்கு உலர்உணவு நிவாரணம் வழங்கப்படுவதில்லை. மேலும் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் மேற்படி அகதிகள் முகாமின் கொட்டில்கள் சேதமடைந்துவிட்டன. ஓலைகள் உக்கிவிட்டன. எந்த நேரமும் கொட்டில்கள் சாய்ந்து தரையில் விழுந்துவிடும் நிலையில் உள்ளன?

இம்மக்களுக்கு உலர் உணவு நிவாரணத்தைத் தவிர எந்த உதவியையும் அரசு இதுவரை செய்துகொடுக்கவில்லை. இவர்களை வேறிடங்களுக்கு மீளக் குடியமர்த்தும் முயற்சியும் இதுவரை ஆரம்பிக்கப் படவில்லை.

---

அரா லிக

படகுகளில் சென்ற மீனவர்கள் விரைவாக கரை திரும்பினர்.

இத்தகைய இராணுவ நெருக்கடி நிலைமைகளால் பலவேறு இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து இப்பகுதியில் தொழில் செய்யும் மீனவர்களின் பொருளாதார நிலை மிகவும் மோசமடைந்திருப்பதும் குறிப்பித்தக்கது. (07)

---

வது பற்றி சுயேட்சையாக முடிவெடுக்கும். முழு அதிகாரமும் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சென்ற சட்டப் பேரவைத் தேர்தலில் தேர்தல் ஐக்கிய முன்னணி மகத்தான வெற்றி பெற்றதற்குச் செல்வி ஜெயலலிதாவின் தலைமையை ஒரு தீர்மானம் பாராட்டியிருக்கிறது.

புதுவைக்குத் தனி மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் கூறுகிறது.

---

மாவட்ட

வுத்திட்ட இணைப்பு, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு என்பன தொடர்ந்தும் மாவட்ட அடிப்படையில நடைபெறும். இதனால் மாவட்ட மட்டமானது தொடர்ந்தும் செயற்படும்.

மக்களின் அவசர தேவைகளுக்கு அறிக்கை சமர்ப்பித்தல மாவட்ட மட்டப் பணியை மேலும் வலியுறுத்தும்.

கச்சேரி அரசாங்க அதிபர் என்ற பெயர்களில் மாற்றங்கள் இருப்பினும், மூத்த அதிகாரி மாவட்ட செயலகத்திற்குப் பொறுப்பாக இருப்பார். மாவட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன் மேற்பார்வை, அபிவிருத்தி முன்னேற்றக் கட்டுப்பாடுகள் என்பன அவர் கைவசம் இருக்கும்.

இவ்வாறு திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

---

இராணுவ

நடவடிக்கை யுத்தம் நடைபெறும் எந்த நாட்டிலும் இல்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை இராணுவ தலைமைப்பீடத்தின் கையிருப்பில்உள்ள ஆயுதங்கள் இந்த விசேட குழுவுக்கு காண்பிக்கப்படவேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது. ஆனால் கூட்டுப்படை தலைமையின் கையிருப்பில் உள்ள ஆயுதங்களின் பட்டியலை தளபதிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


---

பலியான

303 ரைஃபிள் - 25 என்பனவும் அடங்குகின்றன.

மேலும் 106 எம்.எம். ஆர்.சி எல்-01 203 கிறனைட் பிஸ்டல்-24, அதற்குரிய எறிகணைகள் - 401, ஆர். பி. ஜி லோஞ்சர்-23, அதற்குரிய எறிகணைகள் - 298, மோட்டார்-24, எறிகணைகள்-752 சுமார் ஏழு லட்சம் பலரக ரவைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

---



எமது குடும்ப குல விளக்கு

## அமரர் திரு. இராசையா கந்தசாமி

(உரிமையாளர் கீதா ஜூவலர்ஸ்
நவீனசந்தை சாவகச்சேரி)

பிறப்பு: 23-05-1949 இறப்பு: 10- 1-1992

திதி 28-12-1992

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய் இல்லத்தின் ஒளி விளக்காய் சோபித்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் திடீரென மறைந்து ஓராண்டு என்ன? ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலாது உங்கள் ஆத்மசாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

நாளை திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் அஞ்சலி நிகழ்விலும் மதிய போசன வைபவத்திலும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
(3869) அன்பு மனைவி, பிள்ளைகள்

---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 26.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7262

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

28-3029, 26-9140, 26-8052, 28-6546, 28-1414,
26-5962, 28-0587. 41-4129. 28-0425, 42-3726,
27-2088, 26-5725, 26-1583, 42-0962, 27-5482,
42-1059, 24-5461, 26-1019 26-0512, 26-7039,
26-2108, 40-4429. 24-4560, 43-2524, 28-1110,
26-1785, 41-9396, 26-2391, 28-9927, 42-4126,
27-6563, 24-5036, 26-6628, 42-9325, 27-8283
42-0849, 27-9327, 41-9111, 26-2654, 27-5186,
42-1494, 26-4882, 41-5605, 40-7207, 27-8999,
40-7299, 26-6029, 28-5294, 28-4255, 40-2829,
27-9756, 42-0999, 41-9038, 27-7419, 27-2084,
26-0495, 24-3364, 28-8054, 41-4194, 27-2004,
26-5873, 27-4024, 24-4957, 26-5493, 28-3528,
26-5850.

வட பகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:

41-7563, 27-9083, 24-3178, 26-3183, 41-9579,
26-2585, 24-5679, 24-4481, 27-8515, 24-2024,
26-4436, 27-5845, 28-1730, 42-1178, 27-1375,
40-2573, 41-9997, 41-9746, 24-2680, 27-4239,
26-3017, 24-5167, 24-6489, 22-3938.

---


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.